கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ப.மு.எண். 4662/அ1/2023 நாள். 14/10/2024

*******

**பொருள்** : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – கன்னியாகுமரி மாவட்டம் – பணிக்காலத்தில் 24.04.2011 அன்று காலமான, மேல்புறம், அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திருமதி. V. விலாசினி என்பாரின் வாரிசுதாரரான மகன் செல்வன் V. அஜின் என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக குலசேகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

**பார்வை** :

1. கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 5718/அ1/2021 நாள். 11.10.2022
2. மார்த்தாண்டம், மாவட்டக்கல்வி அலுவலரின் ந.க.எண். 2946/அ1/2020 நாள். 23.06.2023
3. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 59125/ஜே/இ4/2023 நாள். 13.08.2024
4. அரசாணை (நிலை) எண்.80. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q1) துறை, நாள் 02.03.2016
5. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018
6. அரசாணை(நிலை) எண்.48.தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 26.02.2021.
7. அரசுகடிதஎண்.1308/ப.க4(1)/2023–1, பள்ளிக்கல்வித்துறை. தலைமைச்செயலகம், நாள் 06.11.2023
8. சென்னை 06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 41477/ஜே/இ1/2022 நாள். 15.12.2023
9. அரசுக்கடித (efile) எண். 4419/தொ.க.1(1)/2024–1 நாள். 17.05.2024
10. அரசாணை நிலை எண். 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) த்துறை நாள். 08.03.2023
11. அரசாணை நிலை எண். 151 ப.க (SE1(1)) பள்ளிக்கல்வித்துறை நாள். 09.09.2022

***************

கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம், அரசு உயர்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்தபோது 24.04.2011 அன்று காலமான திருமதி. V. விலாசினி என்பாரின் வாரிசுதாரரான மகன் V. அஜின் என்பாருக்கு பார்வை (1)ல் காணுமாறு கருணை அடிப்படையில் குலசேகரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிவாய்ப்பு வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் பணிவரன்முறை செய்திட கோரி பார்வை (2)ன்படி பெறப்பட்ட கருத்துருக்கள் 04.09.2023 நாளிட்ட கடிதம்வழி பரிந்துரைக்கப்பட்டது.

பார்வை (9) இல் காணும் அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத நேர்வில், நியமன அலுவலர் நிலையில பணிவரன்முறை செய்து ஆணை வழங்கும் வகையில் பார்வை (3) ன்படி தனியரின் கருத்துருக்கள் மற்றும் பணிப்பதிவேடு மீளப் பெறப்பட்டது.

பார்வை (4), (6)ல் காணும் அரசாணைகளில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்று எவ்வித விதித்தளர்வுகள் மற்றும் அசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாதவர்களுக்கு பணிவரன்முறை செய்வது குறித்து வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை (5)ல் காணும் அரசாணைப்படி தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை என்பதால் பார்வை (7)ல் காணும் அரசுக்கடிதத்தில் விதித்தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் வழிகாட்டுதல் படி செயல்பட பார்வை (8)இல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டது.

பார்வை (9)இல் காணும் அரசுக்கடிதத்தில் பணிவரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லாத நிலையில் பார்வை (10)ல் காணும் அரசாணையின் இனம் 16–ன்படி சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2)ன்படி பரிந்துரைக்கப்பட்ட, மேல்புறம், அரசு உயர்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணியிலிருக்கும்போது 24.04.2011 அன்று காலமான திருமதி. V. விலாசினி என்பாரின் வாரிசுதாரரான மகன் செல்வன் V. அஜின் என்பாருக்கு கருணைஅ அடிப்படையில் இளநிலை உதவியாளராக குலசேகரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் நியமனம் வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்த 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை கோரிய நேர்விலும் விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாததால் பார்வை (4) முதல் பார்வை (11) முடிய உள்ள அரசாணைகள், அரசுக்கடிதங்கள், பள்ளிக்கல்வி இயக்கக செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இளநிலை உதவியாளர்பணியில் கீழ்காணுமாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணிவரன்முறை செய்யப்படும் பணியாளரின் பெயர், பதவி திரு/திருமதி/ செல்வன்/செல்வி | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| V. அஜின்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, குலசேகரம் | V. விலாசினி<br>பட்டதாரி ஆசிரியை,<br>அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்புறம் | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

**நிபந்தனைகள்**

1) இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்த நாளில் இருந்து இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும்.
2) தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டும்.

பணிவரன்முறை சார்ந்த பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும், அசல் ஆணை, அசல் கல்விச்சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் வழங்குமாறும் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**

1. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் (அசல்)
   (Certificate No.4188847, Reg. No. 021137)
2. 10 ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் உண்மைத்தன்மை சான்று (அசல்)
3. ஒருங்கிணைந்த சான்று (அசல்)
4. இறப்புச் சான்று (அசல்)
5. வாரிசு சான்று (அசல்)
6. அசல் பணிப்பதிவேடு
7. பணிநியமன ஆணை அசல்

முதன்மைக்கல்வி அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்

பெறுநர்

1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை)
   மார்த்தாண்டம்
2. சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
3. கோப்புக்கு